மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை - திருமதி.P.அனுராதா, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2023ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 15ம் நாள் புதன்கிழமை

இ.ம.எண்.02/2023
உள்
இ.ம.எண்.01/2021
உள்
அசல் வழக்கு எண்.67/2015
-------------

1. முத்துகிருஷ்ணமநாயக்கர் (இறப்பு)
2. எம்.சங்கரசுப்புராஜ்
3. எஸ்.பாலகிருஷ்ணன் ... மனுதாரர்கள்/புரபோஸ்டு வாதிகள்

/எதிர்/

ஏ.நாராயணன்
ஏ.ராமசாமி
என்.ஐயப்பன்
ஆர்.ஐயப்பன் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு 23.01.2023ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 09.02.2023ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/ புரபோஸ்டு வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.கே.பலராம் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.வி.ரவீந்திரன் அவர்கள் ஆஜராகியும், 3, 4 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர்கள் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிர்உரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151-ன் கீழ் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், பிராதில் மனுவில் கண்டுள்ளபடி திருத்தங்கள் செய்ய உத்தரவிடக்கோரி 23.01.2023ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2). மனுதாரர்கள்/புரபோஸ்டு வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:-</u>**

பிராது வழக்கில் இடைநிலை மனு எண்.1 வருடம் 2021 என்ற மனுவில் மனுதாரரையும், 2ம் மனுதாரையும் பிராது வழக்கில் இறந்துபோன 1ம் வாதியின் சட்ட வாரிசாக சேர்க்க வேண்டி மனு செய்ததில் மனு 08.12.2022 தேதியன்று அனுமதிக்கப்பட்டு, நீதிமன்றம் வாரிசு சேர்க்க மேல் நடவடிக்கைக்காக உத்தரவிட்டது. அதன்படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவில் குறிப்பிட்டு சொன்னபடி பிராதில் திருத்தங்கள் செய்ய அனுமதிக்க வேண்டுமென்று மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

**<u>3). 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்:-</u>**

இறந்துபோன 1ம் வாதிக்கு மனுதாரர்கள் மட்டுமே வாரிசுகள் என்பதையும், மனுதாரர்களுக்கு வழக்கை தொடர்ந்து நடத்துவதற்கு உரிமை உள்ளது என்பதையும், அசல் வழக்கு மனுதாரர்களுக்கு Survive ஆகி உள்ளது என்பதையும், மனுதாரர்களே கண்டிப்பாக நிரூபிக்க வேண்டும். மனுவில் கண்டுள்ள சீர்திருத்த விபரங்களில் சொல்லியுள்ள சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டவர்களாவார்கள். வழக்கு சொத்தில் மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை. எனவே, மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4). இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

5). மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் இல்லை.

6). இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

7). தீர்வு:-

மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிருரையும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரர்களால் பிராதில் மனுவில் கண்டுள்ளபடி திருத்தங்கள் செய்ய உத்தரவிடக்கோரி 23.01.2023ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரர்களுக்கு தங்களது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும் நஷ்டமும் ஏற்படக்கூடும். மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும் எழக்கூடும். மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வாறு இழப்பு ஏற்படும் என்பது குறித்து எதிருரையில் எதிர்மனுதாரர்கள் குறிப்பிட்டு கூறவில்லை. எனவே மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை வாதுரைகள் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, பிராதில் மனுவில் கண்டுள்ளபடி திருத்தங்கள் செய்ய உத்தரவிடக்கோரி 23.01.2023ம் தேதி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை

அனுமதித்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 15ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.

மனுதாரர்கள்/புரபோஸ்டு வாதிகள் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்:- இல்லை
எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் :- இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.